IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.191/2019

Deposition of Witness PW7

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகேசன் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**எதிரிகள் இன்று ஆஜர் இல்லை. எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 82ன் கீழ் பிரகடணப்படுத்தப்பட்டுள்ளார்கள்.**

**முதல் விசாரணை**

நான் தம்மம்பட்டியில் வசித்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் சூர்யா, அமிர்தவள்ளி ஆகியோரை தம்பிதுரை மூலமாக எனக்கு தெரியும். நான் MBA படித்தபோது தர்மபுரியைச் சேர்ந்த எனது நண்பர் தம்பிதுரை என்பவரும் என்னுடன் படித்தார். தம்பிதுரையின் நண்பர்களான அந்தியூரை சேர்ந்த நவீன், பாலமுருகன் இருவரும் ஈரோட்டை சேர்ந்த சூர்யா என்பவர் வெளிநாட்டில் வேலை வாங்கிக் கொடுப்பதாக சொன்னதன் பேரில் நானும், தம்பிதுரையும் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஈரோட்டில் ஹனிவெல் அப்பார்ட்மெண்டில் வசித்து வந்த சூர்யா என்கிற ரமேஷ் சந்தர் என்பவரை சந்தித்தோம்.

அப்போது அவரது தாயாரும் உடன் இருந்தார். அந்த சமயத்தில் சூர்யா எங்களிடம் எங்களது படிப்பு பற்றி தெரிந்து கொண்டு அவர் அடிக்கடி வெளிநாடு சென்று வருவதாகவும், சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளில் பல பெரிய கம்பெனிகள் தனக்கு தெரியும் என்றும்,

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.03 19:30:47 +0530

நிறைய பேருக்கு வேலை வாங்கி கொடுத்திருப்பதாகவும், கூறியதோடு தம்பிதுரைக்கு சிங்கப்பூரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் வேலை வாங்கிக் கொடுப்பதாகவும், அதற்காக வேலைக்கான விசா, விமான டிக்கெட்டையும் அவரே ஏற்பாடு செய்வதாகவும் கூறி, அதற்கு மூன்று லட்சம் ரூபாய் செலவாகும் என்றும், விமானத்திற்கான டிக்கெட் செலவு ரூ.12,000/- எனக் கூறி மொத்தம் ரூ.3,12,000/- கொடுக்க வேண்டும் என கூறினார்.

எனக்கும் சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். என்னிடம் பணம் இல்லாததால் சூர்யா மூலம் வெளிநாட்டில் வேலை பெற முயற்சி செய்யவில்லை. சூர்யா சொன்னதை நம்பி தம்பிதுரை ஒப்புக்கொண்டு முதலில் ரூ.1,80,000/- பணத்தை 15.09.2012 அன்று சூர்யாவின் வீட்டில் வைத்துக் கொடுத்தார். அந்த பணத்தை வாங்கிக் கொண்டு அதற்கு ஆதரவாக சூர்யாவின் அம்மா அமிர்தவள்ளி தனது காசோலை ஒன்றைக் கொடுத்தார். அதன் பிறகு 28.10.2012 அன்று வேலைக்கான விசா வந்துள்ளதாக சொல்லி மேலும் ரூ.1,12,000/- ரூபாய் பணத்தை தம்பி துரையிடம் இருந்து பெற்றுக் கொண்டதோடு, அமிர்தவள்ளி கொடுத்த காசோலையையும் ஈரோடு லிஜாடிஹோட்டலில் வைத்து வாங்கிக் கொண்டு 05.11.2012 அன்று விமான டிக்கெட், வேலைக்கான உத்தரவு, அசல் பார்ட்ஸ் போர்ட் ஆகியவை கொடுப்பதாக சொன்னார்.

பிறகு இது பற்றி கேட்பதற்காக தம்பி துரை சூர்யாவுக்கு போன் செய்தபோது 05.11.2012 தேதி அன்று சூர்யாவின் செல்போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது. அதனால் சந்தேகம் வந்து சூர்யா குடியிருந்த வீட்டிற்கு சென்று நானும், தம்பிதுரையும் பார்த்தபோது சூர்யாவின் வீடு

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.03 19:30:55 +0530

பூட்டி இருந்தது. அருகில் இருந்தவர்களிடம் விசாரித்த போது சூர்யா மற்றும் அவரது தாயார் இது போல் பல நபர்களிடம் பணத்தைப் பெற்று வெளிநாட்டில் வேலைக்கு அனுப்புவதாக கூறி ஏமாற்றியுள்ளதாக தெரியவந்தது. பின்னிட்டு இது சம்பந்தமாக பாலமுருகன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் என்னை விசாரித்தனர்.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.03 19:31:01 +0530